# மாணவர்கள் கல்வியைக் கைவிடாது கற்றுக்கொள்வதற்கு உதவும் ஒன்ராறியோவின் கல்வித் திட்டம்

2022–23 கல்வியாண்டில் எவற்றை எதிர்பார்க்கலாம் என்பதை மாணவர்கள் கற்றுக்கொள்வதற்கும், எதிர்கால வேலைகளுக்குத் தயாராவதற்கும், அவர்களின் உடல் மற்றும் மன ஆரோக்கியத்துக்கு ஆதரவளிப்பதற்கும் அறிந்து கொள்ளவும்.

இந்தப் பக்கத்தில்

1. 2022-23 கல்வியாண்டுக்குத் தயாராகுதல்
2. சரியான நேரத்தில் வகுப்பிற்கு மீண்டும் திரும்புதல்
3. மேலதிகப் பயிற்சிக்கான (tutoring) புதிய ஆதரவுகள்
4. எதிர்கால வேலைகளுக்குத் தயாராக்குதல்
5. பாடசாலைகளைக் கட்டுவதற்கும், கல்வியை மேம்படுத்தவும் அதிக பண உதவி
6. மனநலத்துக்கான ஆதரவுகள்
7. இந்தப் பக்கம் பிற மொழிகளிலும் கிடைக்கும்

2022-23 கல்வியாண்டுக்குத் தயாராகுதல்

வைரஸ் பரவும் வேகத்தைக் குறைப்பதற்காக மாணவர்கள் வீட்டிலிருந்த வண்ணம் கற்றுக்கொண்டதைப் போல, COVID-19 பெருந்தொற்றானது பிள்ளைகள், பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்கள் என யாவருக்கும் கடினமாகவே இருந்து வந்துள்ளது,

இரண்டு வருட இடையூறுகளுக்குப் பின்னர், மாணவர்கள் பின்வருவனவற்றைத் தொடர்வதற்கான திட்டத்தை நாங்கள் வைத்துள்ளோம்:

• கழகங்கள், இசைக்குழு மற்றும் களப்பயணங்கள் போன்ற பாடநெறிக்கு அப்பாற்பட்ட மேலதிகச் செயற்பாடுகளை உள்ளடக்கிய முழுமையான பாடசாலை அனுபவத்துடன், செப்டம்பரில் சரியான நேரத்தில் பிள்ளைகளைத் திரும்பவும் வகுப்பில் சேர்த்தல்
• கற்றலில் உள்ள இடைவெளிகளை நிரப்புவதற்கு மேலதிகப் பயிற்சி ஆதரவுகளை விரிவுபடுத்துதல்
• எதிர்கால வேலைகளுக்குத் தேவையான திறன்களை மாணவர்களுக்குக் கற்பித்தல்
• பாடசாலைகளைக் கட்டுவதற்கும் கல்வியை மேம்படுத்துவதற்கும் மேலதிகமான பண உதவி
• விரிவான ஆதரவுகளுடன் மாணவர்களின் மன ஆரோக்கியத்திற்கு உதவுதல்

திட்டத்தின் முக்கிய பகுதிகளையும், மாணவர்களுக்கு உதவ நாங்கள் எடுக்கும் செயற்பாடுகளையும் இந்தப் பக்கம் சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றது.

முழுமையான திட்டத்தைப் பதிவிறக்கவும்

சரியான நேரத்தில் வகுப்பிற்கு மீண்டும் திரும்புதல்

முழுமையான பாடசாலை அனுபவத்துடன், சரியான நேரத்தில் மாணவர்களை வகுப்பிற்குத் திரும்பச் செய்வதைத் தவிர வேறு எதுவும் முக்கியமானதாகப் படவில்லை. அதாவது, நீங்களும் உங்கள் பிள்ளையும் விளையாட்டு, இசைக்குழு மற்றும் களப் பயணங்கள் போன்ற பாடநெறிக்கு அப்பாற்பட்ட செயற்பாடுகளை எதிர்நோக்க முடியும்.

© Queen's Printer for Ontario, 2020

நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் தொலைநிலைக் கற்றலைத் தெரிவு செய்தால் அதுவும் கூடத் தொடர்ந்து கிடைக்கும்.

மேலதிகப் பயிற்சிக்கான புதிய ஆதரவுகள்

மாணவர்களின் வாசித்தல் மற்றும் கணிதத் திறன்களை மேம்படுத்துவதன் மூலம் அவர்களுக்குத் தேவையான கூடுதல் உதவியை நாங்கள் உறுதிசெய்கிறோம்.

மேலதிகப் பயிற்சித் திட்டத்திற்குப் பதிவு செய்யவும்

வார இறுதி நாட்களிலும் கோடை காலத்திலும், வகுப்பின் போது அல்லது வகுப்பிற்குப் பின்னர் வழங்கப்படும் இலவச மேலதிகப் பயிற்சி உதவி குறித்து அறிய உங்கள் பாடசாலை அல்லது பாடசாலை சபையைத் தொடர்பு கொள்ளவும். கற்றலில் உள்ள இடைவெளிகளை நிரப்பவும், எழுத்தறிவு மற்றும் கணிதத் திறன்களை வலுப்படுத்தவும் இந்தத் திட்டங்களுக்கு நாம் நிதியளிக்கின்றோம்.

இணையத்தில் மேலதிகப் பயிற்சியை முயற்சித்துப் பார்க்கவும்

4 முதல் 11 ஆம் வகுப்பு வரையுள்ள மாணவர்கள் Mathify ஐப் பயன்படுத்தி இலவச கணிதப் பயிற்சியைப் பெற்றுக் கொள்ளலாம். பிரெஞ்சு மொழிப் பாடசாலைகளில் தரம் 1 முதல் 12 வரையுள்ள மாணவர்கள் அனைத்துப் பாடங்களிலும் உதவிக்கு Eurêka ஐப் பயன்படுத்தலாம். இந்த இரண்டு சேவைகளும் சான்றளிக்கப்பட்ட ஆசிரியர்களால் வழங்கப்படுகின்றன.

சிறப்புக் கல்வி

சிறப்புக் கல்வித் தேவைகளைக் கொண்ட மாணவர்களுக்கு அவர்களுக்குத் தேவையான கற்றல் ஆதரவுகள் இருப்பதை உறுதிசெய்யப் பாடசாலைச் சபைகளுடன் நாம் தொடர்ந்து பணியாற்றுவோம். சிறப்புக் கல்வி பற்றி அறிக.

எதிர்கால வேலைகளுக்குத் தயாராக்குதல்

மாணவர்களுக்கு எதிர்கால வேலைகளுக்குத் தயாராவதற்குத் தேவையான திறன்களைப் பாடசாலையின் இந்தப் பாடத்திட்டம் கற்பிக்கின்றது.

பயிற்றப்பட்ட கைத் தொழில்கள்

2025 ஆம் ஆண்டுக்குள், ஒவ்வொரு ஐந்து வேலைகளில் ஒன்று பயிற்றப்பட்ட கைத் தொழிலாக இருக்கும் என்பது உங்களுக்குத் தெரியுமா? நாங்கள் இந்தப் பாடத்திட்டத்தைத் தொடர்ந்து புதுப்பிப்போம், இதனால் மாணவர்கள் சிறந்த வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்குக் கைத் தொழில்களுக்குத் தேவையான திறன்களைக் கற்றுக்கொள்வதற்கான வாய்ப்பளிப்போம். பயிற்றப்பட்ட கைத் தொழில்களை மாணவர்கள் ஆராய உதவும் பாடசாலையின் திட்டங்களைப் பற்றி அறிக.

குறியீட்டு முறை

எமது புதுப்பிக்கப்பட்ட பாடத்திட்டத்தின் மூலம், மாணவர்கள் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரையிலான கணிதப் பாடத்திட்டம், 9 ஆம் வகுப்புக் கணிதப் பாடத்திட்டம், 1 முதல் 8 ஆம் வகுப்பு வரையிலான அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பாடத்திட்டம் மற்றும் 9 ஆம் வகுப்பு அறிவியல் பாடத்திட்டம் ஆகியவற்றில் குறியீட்டுத் திறன்களைக் கற்றுப் பயன்படுத்துகின்றனர். சிக்கல்களைத் தீர்க்கும் திறன்களை மேம்படுத்தவும், தொழில்நுட்பத்துடன் மிகவும் வசதியாகச் செயற்படவும் மாணவர்கள் இந்தத் திறன்களைப் பயன்படுத்த முடியும்.

அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம்

அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதத்தில் (STEM) நாம் அதிக கவனம் செலுத்துகின்றோம். இந்த ஆண்டு 1 முதல் 8 ஆம் வகுப்பு மாணவர்கள் திருத்தப்பட்ட அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பாடத்திட்டத்தைக் கற்றுக்கொள்வதோடு, 9 ஆம் வகுப்பு மாணவர்கள் தரப்படுத்தலற்ற (de-streamed) அறிவியல் பாடத்தைத் தொடங்குகின்றனர். பொருளாதாரம் வளர்ந்து வரும் பகுதிகளில் வேலைகளுக்கு

ஏற்புடைய வாழ்க்கைத் திறன்களை மாணவர்கள் கற்றுப் பயன்படுத்துவார்கள்.

பாடசாலைகளைக் கட்டுவதற்கும், கல்வியை மேம்படுத்தவும் அதிக பண உதவி

உயர்-தரமான கல்வியாளர்கள் இல்லாமல் வகுப்பறைகள் இயங்குவதில்லை. சிறந்த பாடசாலைகள் மற்றும் உயர்-தரமான கல்வியுடன் மாணவர்களுக்கு ஆதரவளிப்பதற்காக, நாங்கள்:

• ஆசிரியர்கள், மழலையர் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் உதவி ஆசிரியர்கள் உட்பட 3,000 பணியாளர்களைப் பாடசாலைகளில் பணிக்கமர்த்துகின்றோம்
• அதிநவீன பாடசாலைகள் மற்றும் வகுப்பறைகளை உருவாக்க $14 பில்லியன் தொகையை முதலீடு செய்கின்றோம்
• ஆசிரியர்கள், கல்வியாளர்கள் மற்றும் பாடசாலை ஊழியர்களுக்கு நீதியான மற்றும் நியாயமான ஊதிய உயர்வு வழங்குகின்றோம்
• முதலாவதாக மாணவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் பணிக்கமர்த்தல் நடைமுறைகளைப் புதுப்பிக்கின்றோம்

மனநலத்துக்கான ஆதரவுகள்

நூற்றுக்கணக்கான மனநலப் பணியாளர்கள் இப்போது பாடசாலைகளில் மாணவர்களின் மன நலனுக்காக உதவுகின்றனர். உங்கள் பிள்ளையின் பாடசாலையில் உள்ள மனநலச் சேவைகளைப் பற்றி அறிய உங்கள் பிள்ளையின் அதிபரைத் தொடர்பு கொள்ளவும்.

ஒன்ராறியோவின் ஆரோக்கியத்திற்கான வழிமுறையாகிய மாகாணத்தின் மனநலம் மற்றும் போதைப் பொருள் அடிமைத்தனத்தை ஒழிக்க உதவும்   அமைப்பு ஆகியவற்றை உருவாக்குவதற்கான திட்டத்தைப் படிக்கவும். இளைஞர்கள் உட்பட மாகாணம் முழுவதிலும் உள்ள சமூகங்களில் மனநல உதவிகளுக்கான அணுகலை விரிவுபடுத்தவும் மேம்படுத்தவும் 10 ஆண்டுகளில் $3.8 பில்லியன் தொகையை நாம் முதலீடு செய்கின்றோம்.

மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கான திட்டங்கள் மற்றும் சேவைகள்

• 18 வயது வரையுள்ள பிள்ளைகள் மற்றும் இளைஞர்களுக்கான மனநலத் திட்டங்கள் மற்றும் சேவைகளைக் கண்டறியவும்.
• COVID-19 இன் போது மாணவர்களின் மன ஆரோக்கியத்துக்கு உதவிபுரியும் சாதனங்களைப் பெற்றுக் கொள்ளவும்.
• மனநலம், போதைப் பொருள் அடிமைத்தன ஒழிப்பு சேவைகள், கல்வி மற்றும் வேலைவாய்ப்பு சேவைகளை இளைஞர் நல மையத்தில் அணுகவும்.
• LGBTQI2S மாணவர்களுக்கான ஆதாரங்கள் மற்றும் வெபினார்களைக் (webinar) கண்டறியவும்.

மாணவர்களுக்குரிய இலவச உதவி இணைப்புகள்

மாணவர்கள் ஒரு நிபுணத்துவ ஆலோசகருடன் பேச உதவி இணைப்பை அழைக்கலாம்.
இந்த உதவி இணைப்புகள் இலவசமானவை, அநாமதேயமானவை, ரகசியமானவை மற்றும் வாரத்தின் 7 நாட்களிலும் 24 மணிநேரத்துக்குக் கிடைக்கக் கூடியவை.

• பிள்ளைகள் மற்றும் இளைஞர்கள் Kids Help Phone ஐக் கட்டணமற்ற தொலைபேசியில் அழைக்கலாம்: 1-800-668-6868
• உயர்தரப் பாடசாலைக்குப் பின்னர் மேற்படிப்புப் படிக்கும் மாணவர்கள் Good2Talk ஐக் கட்டணமற்ற தொலைபேசியில் அழைக்கலாம்: 1-866-925-5454